செய்தி வெளியீடு எண்: 04 நாள்: 04.09.2017

**தேனி மாவட்டம்,**
**மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில்**
***3 பயனாளிகளுக்கு ரூ.19,19,104/- மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ந.வெங்கடாசலம், இ.ஆ.ப, அவர்கள் வழங்கினார்:-***

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் (04.09.2017) இன்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ந.வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடமிருந்து 116 கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்து, 3 பயனாளிகளுக்கு ரூ.19,19,104/- மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, ஆதரவற்ற விவசாயக்கூலி உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் அடையாள அட்டை, பட்டாகோருதல், பட்டா மாறுதல், கல்விக்கடன் கோருதல், இலவச தையல் இயந்திரம் கோருதல், காவல்துறை தொடர்பான மனுக்கள், முன்னாள் படைவீரர்கள் மற்றும் வாரிசுதாரர்கள் மற்றும் மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் பல்வேறு கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள். பெறப்பட்ட மனுக்கள் தகுதி வாய்ந்த மனுக்களா என்பதனை உடனடியாக விசாரணை மேற்கொண்டு அவர்களுக்கு எந்தவித காலதாமதமின்றி விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்கு 15 நாட்களுக்குள் பதிலளிக்குமாறும், மேலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவு மனுக்கள் மீதும், மக்கள் குறைதீர்க்கும் நாளில் பெறப்பட்ட மனுக்கள், முன்னாள் படைவீரர் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மகளிர் சுய உதவிக்குழுக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டங்களில் பெறப்பட்ட மனுக்கள் மீதும் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து ஆய்வு மேற்கொண்டு, மனுதாரர்களுக்கு உரிய காலத்தில் பதிலளிக்குமாறு துறை அலுவலர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தில், வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில், வேளாண்மையில் இயந்திர மயமாக்குதலை ஊக்குவிக்கும் பொருட்டு வேளாண்மை இயந்திர மயமாக்கலுக்கான சார்பு இயக்கத்திட்டத்தின் கீழ் 3 பயனாளிகளுக்கு ரூ.19,19,104/- மதிப்பீட்டில் ரூ.3,50,000/- அரசு மானியத்துடன் கூடிய டிராக்டர்களையும், வருவாய்த்துறையின் சார்பில் 1 பயனாளிக்கு மாதாந்திர உதவித்தொகைக்கான ஆணையினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ந.வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.செ.பொன்னம்மாள் அவர்கள், வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் திரு.ராஜேந்திரன் அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.சந்திரசேகரன் அவர்கள், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) திரு.தங்கவேல் அவர்கள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.ரகுபதி அவர்கள், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ச.தங்கவேல் அவர்கள், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி.ஜெயசீலி அவர்கள், வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர்கள் திரு.ராஜன் அவர்கள், திரு.விஜயன் அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**